31st August 1961]

the view-points may be put forward on that day, and there is no need to put any further supplementaries now, especially when the Hon. Minister wants time to study the various aspects. That was why I said that we could pass on to the next question.

SRI M. KALYANASUNDARAM: அடுத்த விவாதத்திற்குள்ளாகவாவது சர்க்கார் இந்த அறிக்கையைப் பரிசீலனை செய்து, இதில் நமது கருத்துக்களை யொட்டியவை எவை; முரண்பாடாக இருக்கக்கூடியவை எவை என்பதை தயாரித்து, சர்க்காருடைய கருத்து என்ன என்பதற்கு ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அறிக்கைக்கு மேலே அறிக்கை வேண்டுமா என்பது யோசிக்கவேண்டிய விஷயம்.

Central Taxes (State's share)

*1531 *Q.*—**SRI S. M. ANNAMALAI:** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய சர்க்கார் விதிக்கும் வரிகளில் மாநில சர்க்காருக்குத் தரவேண்டிய பங்கு கிடைக்கவில்லை என்பது உண்மையா?

(இ) அப்படியானால், எந்தெந்த இனங்களில் எவ்வளவு பணம் குறைவு?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) No.

(இ) Does not arise.

SRI S. M. ANNAMALAI: நமது நிதி அமைச்சர் அவர்கள் மேல் சபையில் பேசுகின்றபோது சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரிடம் இருந்து நமக்கு வந்துசேரவேண்டிய பணம் சில ஐட்டங்களில் வந்துசேர வில்லை யென்று சொல்லியிருக்கிறார்களே, அதைக் குறித்து கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இதிலே கேட்கப்பட்டிருப்பது—"whether it is a fact that the share of the Central taxes due to this State has not been received" என்பதுதான். வரவேண்டிய பங்கை அதிகரிக்கவேண்டும் என்றுதான் பைனான்ஸ் கமிஷனிடம் வற்புறுத்தியிருக்கிறோம். நான் கொடுத்திருப்பதைப் படித்துவிட்டு கேள்வி கேட்டால் சௌகர்யமாக இருக்கும்.

SRI M. KALYANASUNDARAM: நிதிக் கமிஷன் முன்பு நமது சர்க்கார் ஏதாவது சிபார்சுகளைக் குறித்து சமர்ப்பித்திருக்கிறார்களா? அப்படியானால் அங்கே கொடுக்கப்பட்டிருப்பதன் நகலை இந்தச் சபை முன்பு வைத்து விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் தரப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்தச் சர்க்கார் தன் கருத்துக்களை பைனான்ஸ் கமிஷன் முன் வைத்திருக்கிறது. இந்தச் சபை முன்பு வைக்கலாம் என்று யோசித்ததற்கு அது கான்பிடென்சியல் ஆனதினால் அதை வைப்பது உசிதம் இல்லையென்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் அதையொட்டி கனம் அங்கத்தினர்கள் ஏதாவது நல்ல கருத்துக்களைக் கொடுத்து உதவினார்களென்றால் நான் நன்றி செலுத்துவேன்.

SRI M. KALYANASUNDARAM: அப்படியானால் சர்வ கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தையாவது கூட்டி முடிவு செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதைப்பற்றி ஆலோசித்து முடிவு செய்யப்படும்.

[31st August 1961

SRI K. ANBAZHAGAN: இதற்கு முன்னால் மாநில அரசாங்கத்தார் மத்திய அரசிடமிருந்து பெறவேண்டிய பங்குத் தொகையை இழந்துவிட்டதற்கு ஈடு கட்டக்கூடிய அளவில் வேறுவகையில் அந்தப் பங்கைத் தரவேண்டுமென்று மத்திய சர்க்காரை வற்புறுத்துவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: வரவேண்டிய தொகையை இழந்துவிட்டதாகச் சொல்லமுடியாது. அந்தமாதிரி போனால் கேஸ் இல்லை. பல் வேறு காரணங்களால் இப்போது ஒதுக்கியிருக்கிற தொகையை அதிகரிக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவ்வளவுதான.

Conference of Municipal Commissioners (Ootacamund)

* 1532 Q.—**SRI V. K. KOTHANDARAMAN**: கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உதகமண்டலத்தில் சமீபத்தில் கூடிய முனிசிபல் கமிஷனர்களின் மகாநாட்டில் என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: It was a departmental Conference and various subjects were discussed at the meetings. Resolutions as such were not passed at the Departmental Conference.

SRI M. KALYANASUNDARAM: Sir, both Question Nos. 1533 and 1534 may be taken up together.

DEPUTY SPEAKER: Yes, they may be taken up together.

Tourists Centres

* 1533 *Q.*—**SRI M. KALYANASUNDARAM**: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the steps taken to develop Yercaud and Hogainakal in Salem district as Tourists Centres; and

(*b*) when the construction of Low Income Group Rest Houses at these places would be taken up?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Schemes for the construction of Low Income Group Rest Houses at Yercaud and Hogainakkal at an estimated cost of Rs. 2·50 lakhs and Rs. 1·50 lakhs respectively, have been included under the Tourist Development Plan of the Third Five-Year Plan.

(*b*) The Low Income Group Rest Houses will be taken up for execution during 1962–63 in Yercaud and 1963–64 in Hogainakkal.

* 1534 *Q.*—**SRI M. KALYANASUNDARAM**: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to develop Grand Anicut and Upper Anicut on the Cauvery in Tiruchirappalli district as Tourists Centres; and

(*b*) whether Low Income Group Rest Houses will be constructed at these places?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) and (*b*): The answer is in the negative.